# சிறுவர்

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்



### நான்காம் காலாண்டு, 2026


1. எங்கள் வீட்டுக்கு வாருங்கள் (செப்டம்பர் 26)....................................3
2. ஊழியத்தில் தூதுவர் (அக்டோபர் 3)....................................7
3. ஓடியவன் திரும்புதல் (அக்டோபர் 10)....................................10
4. மேலங்கியைக் கொண்டுவா (அக்டோபர் 17) .................................... 14
5. மன்னிக்கும் அக்கினி (சஅக்டோபர் 24) .................................... 17
6. கடிகாரத்தில் நீண்டநேரம் (அக்டோபர் 31) .................................... 21
7. களிமண் ஜாடி (நவம்பர் 7) .................................... 24
8. நெகேமியா–தேவ ஊழியர் (நவம்பர் 14) .................................... 28
9. எதிர்காலத்து நம்பிக்கை (நவம்பர் 21) .................................... 31
10. பேச்சற்றவராகி விட்டாரே! (நவம்பர் 28) ....................................35
11. சொல்லாமலிருக்க முடியாது (டிசம்பர் 5)....................................38
12. உனக்குக் கேட்கிறதா? (டிசம்பர் 12).................................... 42
13. சந்தோஷத்தைப் பரப்புவோம் (டிசம்பர் 19) .................................... 45



தமிழாக்கம்

மெல்டா மார்சல்

தென்கிழக்கு இந்திய ஒன்றியம்

செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர், சென்னை – 600 048

உங்கள்மேல் அதிக அக்கறைகொண்டவர்கள் உங்களுக்காக பிரத்தியேகமாக எழுதியிருப்பவை இந்த ஓய்வுநாள் பள்ளிப் பாடங்கள். தேவனைப் பற்றியும், உங்கள் மேலும் உங்களுடைய குடும்பத்தினர்மேலும் அவர் வைத்திருக்கிற அன்பைப் பற்றியும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். தேவனும் அதையே விரும்புகிறார். தாம் உங்களை அதிகமாக நேசிப்பதை நீங்கள் அறிந்துகொள்ள அவர் விரும்புகிறார். உங்களுடைய நெருங்கிய நண்பராகவும் அவர் விரும்புகிறார். அவரைப் பற்றி நீங்கள் அனைத்தையும் அறிந்துகொள்ள அவர் விரும்புகிறார். நீங்கள் அவருடைய நண்பர்களாக மாறவும் அவர் விரும்புகிறார்.

இந்தப் பாடங்களில் தேவனுடைய அன்புபற்றி அறிந்துகொள்ளும்போது, அவர்மேல் அதிகம் அன்புகூட செய்யவேண்டியதை யோசியுங்கள். அவரைத் துதித்துப் பாடலாம்; அவர் அதிசயத்தைப் போற்றி ஜெபிக்கலாம்; அவர் அன்பை குடும்பத்தில் வெளிப்படுத்தலாம்.

உங்களுடைய உள்ளத்தில் தேவனுக்கு நீங்கள் விசேஷித்த இடத்தைக் கொடுக்க வேண்டும். அதுதான் எங்களுடைய ஜெபமும்கூட.

– ஜெனரல் கான்ஃபரன்ஸ் ஓய்வுநாள் பள்ளி.

***1-4 பாடங்கள் வீட்டில் சேவைசெய்வது பற்றியது.***

- *வீட்டிற்கு வருவோரிடம் இரக்கம் காட்டும்போது தேவனைச் சேவிக்கிறேன்.*
- *ஆர்வத்தோடு சேவைசெய்யும்போது தேவனைச் சேவிக்கிறேன்.*
- *வீட்டில் நான் இயேசுவுக்குச் சேவைசெய்யமுடியும்.*
- *தேவனுக்குச் சேவைசெய்கிறவர்களுக்குச் சேவைசெய்வதும் தொழுகையே.*

**5-9 பாடங்கள் தேவன் தம் வாக்குறுதிகளைக் காப்பது பற்றியது**

- நான் கேட்டால் தேவன் கிருபையால் என் பாவஙகளை மன்னிக்கிறார்.
- தேவன் தம் வாக்குறுதிகளைக் காப்பாற்றுகிறார்.
- தேவன் என்னை தம் கரங்களில் வைத்து, என்னை வனைகிறார்.
- தேவன் தம் சித்தம்செய்ய கிருபையும் வல்லமையும் கொடுக்கிறார்.
- வேதாகம வாக்குறுதிகள் நிறைவேறுகின்றன.



**10-14 ஆராதனை செய்வது இயேசுவின் மேலான நம் அன்பைப் பகிர்வது**

- தேவ அன்பையும் தயவையும் மற்றவர்களுக்குச் சொல்லும்போது அவரைத் தொழுகிறேன்.
- தேவன் என்மேல் அன்புகாட்டினதைச் சொல்லும்போது அவரைத் தொழுகிறேன்.
- இயேசுவின் நற்செய்திகளுக்குச் செவிகொடுக்கும்போது அவரைத் தொழுகிறேன்.
- நான் மற்றவர்களுக்கு இயேசுவை சந்தோஷமாக அறிவிக்கும்போது அவரைத் தொழுகிறேன்.
- நான் என் காணிக்கைகளால் தேவனைத் தொழுகிறேன்.

பாடம் 1

# எங்கள் வீட்டுக்கு வாருங்கள்

***உங்கள் வீட்டுக்கு வருகிற விருந்தினரை நீ எப்படியெல்லாம் உபசரிப்பாய்? அவர்கள் உன் வீட்டில் வசதியாகத் தங்குவதற்கு நீ எவ்வாறு உதவுவாய்?***

தேவனுடைய ஊழியக்காரனாகிய பவுல் இயேசுவைப் பற்றி யாவருக்கும் சொல்ல விரும்பினார். எனவே, நீண்ட பயணங்களை மேற்கொண்டார். இதையே ‘பவுலின் ஊழியப்பயணங்கள்’ என்கிறோம். அவற்றுள் இரண்டாவது பயணத்தில் நடந்த சம்பவத்தை இப்போது பார்ப்போம். கொரிந்துவிலுள்ள மக்களுக்கு இயேசுவைப்பற்றிச் சொல்ல அவர் வந்தார். கொரிந்துப் பட்டணத்தில், அதிகமான மக்கள் வசித்தார்கள். அது ஒரு முக்கியமான பட்டணமாக இருந்தது. ‘கொரிந்துவில் எங்கே தங்குவது? என்ன செய்வது?’ என்று பவுலுக்குத் தெரியவில்லை. அந்த வேளையில்தான் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்ற கணவன்-மனைவியைச் சந்தித்தார். அவர்கள் பவுலிடம் அன்பு காட்டினார்கள்.

யூதர்கள் அனைவரும் ரோம் நகரத்திலிருந்து வெளியேற வேண்டுமென்று ரோமப் பேரரசர் கட்டளையிட்டிருந்தார். ஆக்கில்லா ஒரு யூதன். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ரோமிலிருந்து வெளியேறி, சிறிது நாட்களுக்கு முன்னர்தான் கொரிந்துப் பட்டணத்தில் குடியேறியிருந்தார்கள். இன்னும் அவர்கள் தங்கள் வீட்டின் காரியங்களை முற்றும் ஒழுங்குபடுத்தவில்லை. ஆனாலும், பவுலை வீட்டிற்கு வரவழைத்து உபசரிப்பதே அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது.

கொரிந்துவில் யூதர்கள் அநேகர் இருந்தார்கள். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கூடாரத் தொழில் செய்பவர்களாக இருந்தார்கள். பவுலுக்கும் கூடாரம் செய்யத் தெரிந்திருந்தது.



## மனன வசனம்

**பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்.**

**ரோமர் 12:13.**

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ஆட்களைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து அவர்களுக்கு உணவும் தங்க இடமும் தந்து உபசரிப்பதில் சிறந்தவர்கள். 'விருந்தோம்பல்' எனும் இந்தப் பண்பு அவர்களிடம் மிகுதியாக இருந்தது. எனவே, அவர்கள் பவுலைத் தங்கள் வீட்டிற்கு ஓய்வுநாள் நண்பகல் உணவு சாப்பிட மட்டும் அழைக்காமல் தங்களுடனேயே அவர் தங்கியிருந்து, தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு அவருக்கு உதவவும் ஆயத்தமாயிருந்தார்கள்.

அவர்களுடைய கூடாரத்தொழிலில் பவுல் அவர்களுக்கு உதவியாயிருந்தார். இயேசுவைப்பற்றி அவர்கள் அதிகமாக அறிந்துகொள்ள, பவுல் உதவினார். ஏறத்தாழ ஒன்றரை வருடக் காலம் பவுல் அவர்களுடன் தங்கியிருந்து, தேவனுடைய ஊழியத்தையும் வேலையையும் செய்துவந்தார்.



பவுலிடமிருந்து இயேசுவைப் பற்றிய சத்தியங்களை ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அதிகமாக அறிந்துகொண்டார்கள். பிறரிடம் இயேசுவைப்பற்றி, தாங்கள் கற்றுக்கொண்ட சத்தியங்களைச் சொல்லிவந்தார்கள்.

இயேசுவைப்பற்றி இன்னும் அநேகரிடம் சொல்ல மூவரும் கொரிந்துவிலிருந்து வேறிடங்களை நோக்கிப் புறப்பட்டனர். அவ்வாறு பயணம் செய்தபோது எபேசுவுக்கு வந்தனர். பவுல் தன் பயணத்தை மேலும் தொடர்ந்தார்.

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் எபேசுவிலேயே தங்கிவிட்டார்கள். அங்கே ஒரு வீட்டை ஆயத்தப்படுத்தினர். அதுவுமின்றி அப்பொல்லோ என்ற ஒரு தேவ ஊழியருக்கு வீட்டிலே இடம் அளித்தனர்.

## செய்தி

**வீட்டிற்கு வருவோரை உபசரிக்கும்போது நான் தேவனுக்குச் சேவைசெய்கிறேன்.**

அப்பொல்லோ அதிகம் படித்தவர். வேதாகமத்தை நன்கு அறிந்தவர். இயேவைப் பற்றி அவர் யூதருடைய ஜெப ஆலயத்தில் பிரசங்கித்ததை ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கேட்டனர். எனவே, அவர்கள் அப்பொல்லோவைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து உபசரித்தனர். மேலும் பவுலிடமிருந்து இயேசுவைப் பற்றித் தாங்கள் கற்றுக்கொண்ட அநேக காரியங்களை அப்பொல்லோவுக்குச் சொல்லிக் கொடுத்தனர். அப்பொல்லோ தங்களுடைய வீட்டில் வசதியாகத் தங்குவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் தந்து ஆதரித்தனர்.

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தாங்கள் சந்திக்கும் அனைவரிடமும் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கூறினர்.

என் செல்லமே, நீயும் மற்றவர்களிடம் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள்போல இயேசுவைப் பற்றிய நற்செய்தியைச் சொல்.

**புதிர் 1**

**செய்முறை:** ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் பவுலை தங்கள் வீட்டில் தங்கவைத்து உபசரித்தார்கள்; அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடம் என்ன? ஒவ்வொரு வார்த்தையிலும் இரண்டாவது எழுத்தை வெட்டிவிடவும். பதில் கிடைக்கும்.

பிதுறழருணக்கிகு

உடதகவுதம்யயேபராகது

நவாவும்

கேதயிவரினுமக்கிகுவிச்

வேசவிடைவ

வெசவிய்யகிமமேறளாகம்

## பாடம் 1 வண்ணம் தீட்டுக



## பாடம் 2 வண்ணம் தீட்டுக



பாடம் 2

# ஊழியத்தில் தூதுவர்

***விமானத்தளத்திற்கும் கப்பல் துறைமுகத்திற்கும் எப்போதாவது நீ சென்றிருக்கிறாயா? அங்கு வந்து செல்லும் விமானங்களையும் கப்பல்களையும் பார்க்கும்போது மிகவும் ஜாலியாக இருக்குமல்லவா?***

துரோவா துறைமுகத்தில் கப்பல்கள் வருவதும் போவது மாக இருந்தது. கப்பலில் இருந்து இறங்கும் ஏணியில் மாலுமிகள் சரக்கு மூட்டைகளோடு ஏறிக் கொண்டும் இறங்கிக் கொண்டும் இருந்தனர். அந்தத் துரோவா துறைமுகத்தில் பவுலின் கண்கள் யாரையோ தேடிக்கொண்டிருந்தன.

பவுல் அங்கே வந்து செல் லும் மாலுமிகளிடம், "நீங்கள் மக்கெதோனியா நாட்டிலே இருந்தா வருகிறீர்கள்?" என்று ஆர்வமாகக் கேட்டார். அவர்கள், "இல்லை" என்று சொன்னபோது, அங்கு வரும் ஒவ்வொரு வரின் முகத்தையும் ஆர்வத் துடன் உற்றுப்பார்த்தார்.

மிகவும் கனிவான வாலிபனாகிய தீத்து என்பவரைத்தான் பவுல் எதிர்பார்த்துக் கொண் டிருந்தார். இந்த, தீத்து என்னும் வாலிபர் எவரையும் தன் அன் பான குணத்தால் கவர்ந்துவிடக் கூடியவர். சபையில் சண்டை கள் எழும்பினாலும், மக்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாமல் போனாலும், தீத்து அவர்களி டம் மிகவும் கனிவாகப் பேசி, வேற்றுமையை நீக்கி, அவர் களை மீண்டும் நண்பர்களாக்கி விடுவார். எனவே பவுலுக்கு தீத்து இப்போது மிகவும் தேவையாக இருந்தார்.

கொரிந்து மக்களுடைய வாழ்க்கைச் சற்றுச் சரியில்லா திருந்தது. அவர்கள் இப்போது தான் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அதற்கு முன்னே சிலைகளை வணங்கி வந்திருந்தனர். மோசமானவர் களாக இருந்தனர். மீண்டும்



## மனன வசனம்

**பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்.**

**யோவான் 20:21.**

அவர்கள் பழைய வாழ்க்கைக்கே போய்விடக்கூடாது என்றும், தேவனுக்குச் சாட்சிகளாக வாழவேண்டும் என்றும் பவுல் விரும்பினார். எனவே, பவுல் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். அதைத்தான் நாம் இப்போது இரண்டு கொரிந்தியர் என்று அழைக்கிறோம். ஆனால், அந்தக் கடிதத்திற்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை. கொரிந்தியரைக் கண்டித்து எழுதியதால் கோபமாயிருக்கிறார்களோ என்று கவலைப்பட்டார். கொரிந்துமக்கள் மேல் மிகுந்த அக்கறையோடிருந்தார். அவர்களின் அனுமதியுடன் மீண்டும் அவர்களைப் பார்த்துவர ஆசைப்பட்டார்.



தன்மேல் அவர்கள் இன்னும் அன்பாயிருக்கிறார்களா அல்லது தன் கடிதம் கண்டு கோபமாயிருக்கிறார்களா என்று பார்த்து வரவே அங்கே தீத்துவை அனுப்பிவைத்திருந்தார். பவுலின் கண்டிப்பான வார்த்தைகள் கொரிந்து மக்கள்மேல் அவர்கொண்ட அன்பினிமித்தமாகவே என்று தீத்து, கொரிந்தியரிடம் சொன்னார். அவர்களும் தேவனுடைய ராஜ்யம் வரவேண்டும் எனும் ஆசையாலேயே அவ்வாறு எழுதியுள்ளார் என்றும் சொன்னார். மக்கெதோனியாவிலிருந்து வந்த கப்பல்கள் எதிலும் தீத்து வரவில்லை.

பவுலுக்கோ தானே மக்கெதோனியா சென்று பார்த்து வரவேண்டும் போலிருந்தது. தீத்துவைப்பார்க்கவும், கொரிந்து மக்கள் தன்மேல் கோபமாயிருக்கிறார்களா என்பதை அறியவும் விரும்பினார். கொரிந்து மக்கள் தன்னைப் பார்க்க விரும்புவார்களா என்றுகூட ஏங்கினார். எனவே மக்கெதோனியா சென்றார். தீத்துவிடம் தனது நண்பர்களின் நிலைபற்றி அறிந்தார்.

## செய்தி

**பிறருக்கு நான் உதவ ஆயத்தமாயிருக்கும்போது நான் தேவனுக்குச் சேவைசெய்கிறேன்.**

தன்னைப் பார்க்க, கொரிந்து மக்கள் மிகவும் ஆசையாயிருக்கிறார்கள்; தன்மேல் அவர்கள் வைத்துள்ள அன்பு குறையவில்லை என்று தீத்துமூலமாகக் கேள்விப்பட்ட போது, பவுல் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மிகுந்த மகிழ்ச்சி யுடன் கொரிந்தியருக்கு மீண் டும் ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதம்தான் 'இரண்டு கொரிந்தியர்'. அவர்களை அன்புடன் வாழ்த்தியும், நல் ஆலோசனைகளைக் கூறியும், ஏழைகளுக்கு உதவும்படியும் அதில் எழுதியிருந்தார்.

மற்ற சபைகளிலுமிருந்தும் பணம் பெற்றுக்கொண்டு எருச லேமிலுள்ள ஏழைகளுக்கு உத வும்படி வருகிற தீத்துவை அன் பாய்நடத்துமாறு எழுதியிருந் தார். இவ்வாறு பவுலும் தீத்து வும் தேவனுக்கும் மனிதருக்கும் ஊழியம் செய்தார்கள்.

என் கண்மணியே, நீயும் ஊழியம் செய்வாயா?

**செய்முறை:** தீத்துவைக் காண மக்கெதோனியாவுக்குச் செல்லவிரும்பும் பவுலுக்கு வழிகாட்டி உதவு.



## புதிர் 2



பாடம் 3

# ஓடியவன் திரும்புதல்

*உன் படுக்கையை யாரேனும் அடிகுபடுத்தி, உனது அறையை நன்றாகச் சுத்தம்செய்து நீ செய்யவேண்டிய வேலைகளை யாரோ ஒருவர் செய்தால் உனக்கு எப்படி இருக்கும்?*

தன்னருகே வந்து நின்ற அந்த உயரமான வாலிபனைப் பவுல் அன்புடன் பார்த்தார். ஊருக்குச் செல்லுவதற்காகத் தயாராக உடை அணிந்து வந்திருந்தான். தோளில் பை தொங்கிக் கொண்டிருந்தது. பவுல், தான் எழுதிக்கொண்டிருந்த கடிதத்தில் தனது கையெழுத்தைப்போட்டு, அதைச் சுருட்டி, அந்த வாலிபன் ஒநேசிமுவிடம் கொடுத்தார்.

தயங்கி நின்ற ஒநேசிமுவைப் பார்த்தார். ‘‘இந்தக் கடிதத்தை உன் எஜமான் பிலமோனிடம் கொடு; உன்னைப்பற்றி



நல்லவிதமாக எழுதியிருக்கிறேன். நீ எனக்கு மகனைப் போன்றவன் என்று எழுதியுள்ளேன். முன்பு நீ உன் எஜமானுக்கு உண்மையாயிருக்கவில்லை. ஆனால், என்னுடன் நீ தங்கியிருந்த சில மாதங்களில் நீ எனக்கு மிகவும் உதவியாயிருந்தாய். இப்போது நீ இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரை நேசிக்கிறாய்; எனவே, எனக்கு நீ சேவைசெய்தது போன்று இனி உன் எஜமான் பிலமோனுக்கும் செய்வாய் என எனக்குத் தெரியும்.’’

மேலும் பவுல் ஒநேசிமுவிடம், ‘‘நீ உன் எஜமானை விட்டு ஓடியதினிமித்தம் உன்மேல் அவருக்குக் கோபமும் மிகவும் வருத்தமும் இருக்கலாம்; ஆனால், எனக்கு நீ உதவியதுபோல இனி அவருக்கும் உதவிசெய்வாய் என்று நான் பிலமோனுக்கு எழுதியுள்ளேன். மேலும் இப்போது நீ இயேசுவை ஏற்றுக்கொண்டிருப்பதால், இனி நீ அடிமையல்லவென்றும் கிறிஸ்துவுக்குள் சகோதரன் என்றும் எழுதியிருக்கிறேன்’’ என்று பவுல் சொல்லிக்கொண்டிருந்தபோது,

## மனன வசனம்

**மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல் கர்த்தருக்கென்றே... செய்யுங்கள்.**

**எபேசியர் 6:7.**

தன் கைகளால் பவுலை ஒநேசிமு அணைத்துக்கொண்டான். அவனது தலை கீழ்நோக்கிக் கவிழ்ந்திருந்தது. கண்களிலிருந்து கசிந்த கண்ணீரைப் பவுலுக்குத்தெரியாமல் துடைத்தான். தான் அவ்வாறு அழுவது யாருக்கும் தெரியாது என்று நினைத்துக்கொண்டான்.

“இன்னும் ஒன்று . . . ”, என்றவாறு ஒநேசிமுவின் கைகளைப் பிடித்தார் பவுல்.

ஒநேசிமு, “நீ உன் எஜமானுக்குக் கொடுக்கவேண்டிய கடனை உன்னிடம் அவர் கேட்கமாட்டார்; ஏனெனில், நான் அக்கடனைச் செலுத்திவிடுவதாக எழுதியுள்ளேன். அவருக்குச் சொல்லிக்கொடுத்திருக்கிறேன். எனவே, அவர் எனக்காக எதையும் செய்வார்; உன்னை மறுப்பின்றி விருப்பமாக ஏற்றுக்கொள்வார். ஆதலால் நீ எதற்கும் தயங்காமல் தேவனை நம்பி, தைரியமாகப் போ” என ஆறுதலாகக்கூறி வாசல்வரை வந்து வழியனுப்பினார். மனம் நெகிழ்ந்த ஒநேசிமு பவுலின் கைகளைப் பிடித்துக்கொண்டான். “உங்களுக்கு நான் எப்படி என் நன்றியைச் சொல்லுவேன்: ஒருபோதும் நான் உங்கள் அன்பையும் உதவியையும் மறக்கமாட்டேன்” என்று கூறினான். பவுலை விட்டுப் பிரிய அவனுக்கு மிக வேதனையாக இருந்தது.

“வருத்தப்படாதே, போய், உன் எஜமானுக்குக் கீழ்ப்படிந்திருந்து, எனக்கு உதவியது போல் அவருக்கும் உதவியாயிரு; உண்மையான கிறிஸ்தவர்கள் அப்படித்தான் செய்வார்கள்; என் மகனே! நீ திரும்பிப் போய் உன் எஜமானனிடம் வேலை செய்ய ஆயத்தமாயிரு.

“என்றைக்கேனும் ஒருநாள் நீயும் என்கூடவே இருப்பாய்; மீண்டும் வந்து எனக்கு நீ உதவியாய் இருப்பாய்” எனக் கனிவாகப் பேசினார். பின்னர் அவனது தோளை அன்புடன் தட்டிக்



## செய்தி

**வீட்டிலும் நான்**
**தேவனுக்குச் சேவைசெய்யமுடியும்.**

கொடுத்து வழியனுப்பினார்.

அதுவுமன்றி அவனிடம், "உன்னை நான் இங்கேயே எனக்கு உதவியாக வைத்துக் கொள்ள முடியும்; ஆனாலும் நீ முதலில் உன் எஜமானுக்கு உதவியாயிரு. அதுவே சரியானது; ஒருவேளை அவரேகூட உன்னை இங்கே அனுப்பி வைக்கலாம்" என்று சொன்னார். அவன் வெளியே நடக்க ஆரம்பிக்கும்போதும், "எனக்கு வீட்டில் ஒரு அறையை ஆயத்தம் பண்ணச்சொல்லியிருக்கிறேன்; கர்த்தருக்குச் சித்தமானால் நான் உங்கள் இருவரையும் பார்க்க விரைவில் வருவேன்" என்றும் சொன்னார்.

பின்னால் திரும்பிப்பார்த்துக் கைகளை அசைத்தவாறே ஒநேசிமு சென்றான். கண்ணீர் கண்களில் திரையிட்டது.

என் செல்லமே, நீயும் பவுலைப்போல மற்றவர்களமீது அன்பு காட்டுகிற பிள்ளையாக வாழ்வாயா?

*செய்முறை:* **இந்தவார மனப்பாட வசனத்தை மீண்டும் வாசியுங்கள். பிறகு, கீழே கோடிட்டுள்ள இடங்களை நிரப்புங்கள்.**

# புதிர் 3



## பாடம் 3 வண்ணம் தீட்டுக



## பாடம் 4 வண்ணம் தீட்டுக



பாடம் 4

# மேலங்கியைக் கொண்டுவா

**எப்போதாவது உன் வீட்டிலிருந்து மிகவும் தூரமாகத் தனியாக நீ சென்றிருக்கிறாயா? சுற்றுலாவுக்கோ, அல்லது உறவினர் வீட்டிற்கோ அவ்வாறு பெற்றோரைப் பிரிந்து சென்றதுண்டா?**

நான்கு சுற்றுச்சுவருக்கு மத்தியிலே பவுல் சிறைப்படுத்தப்பட்டு கல்தரையில் உட்கார்ந்திருந்தார். தரை சில்லென்றிருந்தது. பவுலின் கால்கள் சங்கிலியினால் கட்டடப்பட்டிருந்தது. அந்த அறையில் மிகச் சிறியஒரு சன்னல்மட்டுமே இருந்தது. அந்தச் சன்னலின் வழியேவந்த வெளிச்சம் மிகவும் குறைவாக இருந்தது.

எனவே அறை இருட்டாகவே இருந்தது. குளிராகவும் இருந்தது. ஏதேனும் ஒரு பயங்கரமான மிருகத்தைக் கட்டி



வைப்பதுபோல் அவரைக்கட்டி வைத்திருந்தார்கள். அவர் ஒன்றும் பயங்கரமான மிருகம் அல்ல. பவுல் தேவனுடைய உண்மையான ஒரு ஊழியக்காரர்.

ஆரம்பக்காலங்களில் பவுல் இயேசுவை அறியாதிருந்தார். அவர் இயேசு கிறிஸ்துவைத் தெய்வமென்று கூறிய எல்லாரையும் வேதனைப்படுத்திக் கொண்டிருந்தவர். ஸ்தேவான் என்பவரைக் கொலை செய்தபோது, அவருடைய ஆடைகளை இந்தப் பவுலின் பாதத்தில்தான் வைத்தனர். பவுல் முன்பு சவுல் என்று அழைக்கப்பட்டார்.

ஆனால், பவுலை தேவன் மாற்றினார். இயேசுவைப் பவுல் ஏற்றுக்கொண்ட பின் இயேசுவுக்காக வாழும் ஒரு வல்லமையுள்ள ஊழியக்காரனாக மாறிவிட்டார்.

அச்சமயத்தில்,ரோமப் பேரரசன் நீரோ கிறிஸ்தவர்களுக்கு விரோதமாயிருந்தான். அநேக கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். பவுலையும் கொல்வதற்காகத்தான் சிறைப்படுத்தியிருந்தார்கள்.

## மனன வசனம்

**உங்கள் கிரியையையும்... அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே. எபிரெயர் 6:10.**

இப்போது பவுல் தன்னுடைய இளம் நண்பன் தீமோத்தேயுவை நினைத்துப் பார்த்தார். தீமோத்தேயு பவுலுக்கு மகன்போன்றவன். கடந்தமுறை தீமோத்தேயுவைப் பிரிந்து ஊழியத்திற்காக வந்தபோது கதறி அழுதான்.

குழந்தைப்பருவத்திலிருந்தே தீமோத்தேயுவை, பவுலுக்கு நன்கு தெரியும். இயேசுவைப் பற்றி அவனுக்கு வீட்டில் நன்றாகச் சொல்லிக்கொடுத்திருந்தார்கள்.

பவுலுடன் தீமோத்தேயுவும் அடிக்கடி ஊழியத்திற்குச் சென்றிருக்கிறான். இருவரும் சேர்ந்து மற்ற கிறிஸ்தவர்களிடத்தில் தைரியமாக இயேசுவைப்பற்றிப் பிரசங்கித்திருக்கிறார்கள்; உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு போதிப்பதற்காக பலமுறை பவுல் சிறைத் தண்டனைகளை அனுபவித்ததும் உண்டு. இப்போது அவருக்கு வயதாகி இருந்தது. மழையையும் குளிரையும் அவரால் தாங்கமுடியவில்லை. ரோமப் பேரரசன் கொல்லுவதற்கு முன்னர் குளிரினாலேயே அவர் செத்துவிடுவார் போலிருந்தது.

பவுல் தனது பேனாவை எடுத்தார். தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதத்தொடங்கினார். "என் அன்பு மகனே, தீமோத்தேயுவே! நான் இக்கடிதத்தை மிகுந்த அன்புடன் எழுதுகிறேன். இரவும் பகலும் இடைவிடாமல், என் ஜெபங்களில் நான் உன்னை நினைக்கிறேன்; உன் கண்ணீரை ஞாபகம் பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருக்கிறேன்.

இயேசு மரணத்தை அழித்தார் என்பதை தீமோத்தேயுவுக்குப் பவுல் நினைவூட்டினார். தேவனுடைய பிள்ளைகள் சந்தோஷப்படும்படிக்கு,



# செய்தி

**தேவனுக்குப் பணிபுரியும் பிள்ளைகளுக்கு நான் உதவும்போது நான் தேவனுக்குச் சேவை செய்கிறேன்.**

யாவருக்கும் இந்த நற்செய்தியைச் சொல்ல, பவுல் ஒருபோதும் வெட்கியதோ தயங்கியதோ இல்லை. இயேசுவின் நற்செய்தியைச் சொல்ல, பவுல் மிகுந்த ஆசையாயிருந்தார். பவுல் தனிமையில் வாடினார்.

ஒரு சிலர் மட்டும்தான் அவரைச் சந்தித்து உற்சாகமூட்டிச் சென்றனர். அத்தகையவர்களைப் பவுல் பட்டியலிட்டு வைத்திருந்தார். அத்தகையோருக்குத் தன்னுடைய வாழ்த்துதலைச் சொல்லும்படி, பவுல் தீமோத்தேயுவைக் கேட்டுக் கொண்டார்; குளிர்காலத்திற்கு முன்னரே வரும்படியும், அவ்வாறு வரும்போது தன்னுடைய மேலங்கியைக் கொண்டுவருமாறும் எழுதினார்.

செல்லமே, போதகர்கள்கூட இவ்வாறு தனிமையில் வாடுவது உண்டு. அத்தகையோர் மகிழ நீ என்ன செய்யப்போகிறாய்?

*செய்முறை:* **நீங்கள் உங்கள் போதகருக்கு எவ்வாறு உதவலாம்? ஜெபி, உதவு, ஊக்குவி, சிரி, சேவைசெய், கவனி ஆகிய வார்த்தைகள் கீழே ஒழிந்து கிடக்கின்றன; அவற்றைக் கண்டுபிடித்து வட்டமிடு.**



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ெ | வ | ம | எ | ப | கா | ய் | ஜ |
| ஜ | ல | ந | வ் | ர | ச | கா | ஐ |
| பி | ர | ட | ே | ெ | ட் | யா | ஷ |
| ர | ப | க | வ | னி | ட | லி | ரி |
| ப | ே | ை | ஊ | பூ | ன் | வ | சி |
| பு | ச | க | வா | க் | ட் | க் | ஸ |
| ே | ஒ | ச | டி | ம் | கு | மே | ை |
| ஹ | ே | உ | த | வு | ரீ | வி | ம |

புதிர் 4

பாடம் 5

# மன்னிக்கும் அக்கினி

***உன்னைப்பற்றிச் சொல்ல விருப்பமில்லாத ஒரு காரியத்தை நீ பிறரிடம் சொல்லியது உண்டா? தேவனுடைய தூதைச் செ ால்வதற்குத் தான் தகுதியற்றவன் என்று ஏசாயா தீர்க்கதரிசி எண்ணினார்.***

ஏசாயா தீர்க்கதரிசி ஒரு நாள் ஆலயம் சென்றிருந்தார். அப்போது ஆலயத்திலே தேவ னுடைய தரிசனத்தைக் கண் டார். பரலோகக் காட்சி அவ ருக்குக் காணப்பட்டது. அங்கே பரலோகத்தில் உயரமும் உன் னதமுமான இடத்திலே மிகவும் அழகுடன் விளங்கிய சிங்காச னம் ஒன்று காணப்பட்டது. அந் தச் சிங்காசனம் பளபளவென்று அழகுடன் மிளிர்ந்தது. அதில் ஆண்டவர் உட்கார்ந்திருந்தார்.

அவரது ஆடையின் தொங் கலால் தேவாலயமே நிறைந்து காணப்பட்டது. அவ்வளவு பெரியதாக தேவனுடைய வஸ்திரத் தொங்கல் இருந்தது. ஒரு புறத்தில் பலிபீடம் இருந்தது. அதிலே தகதக வென்று நெருப்புக் கனன்று கொண்டிருந்தது. மஞ்சளும் சிவப்புமாக அந்தத் தணல் அழகுடன் ஒளிர்ந்துகொண் டிருந்தது.

ஆறு செட்டைகளுடைய சேராபீன்கள் எனும் தூதர்கள் தேவனுக்கு மேலாக நின்றார் கள். அந்தத் தூதர்கள் இரண்டு செட்டைகளால் தங்களுடைய முகத்தை மூடி, இரண்டு செட் டைகளால் தங்கள் கால்களை மூடியிருந்தார்கள். தங்களின் இரண்டு செட்டைகளால் பறந்து கொண்டே, ஒருவரையொரு வர் நோக்கி: ‘‘சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பூமி அனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக் கிறது’’ என்று தேவனைப் போற்றிக்கொண்டிருந்தார்கள்.

தேவனுடைய ஆலயம் முழுவதும், தூதர்களின் அழகிய துதிப்பாடல்களால் நிறைந்திருந் தது. அந்தத்துதியினால் வாசல் களின் நிலைகள் அசைந்து



## மனன வசனம்

**உன் அக்கிரமம் நீங்கி உன் பாவம் நிவர்த்தியானது.**

**ஏசாயா 6:7.**

ஆலயம் புகையினால் நிறைந்தது. ஏசாயா 6:2-4.

ஆனால், இப்போது ஏசாயாவின் மனதிலே, பயம் அதிகமாயிருந்தது. அப்போது ஏசாயா, "ஐயோ! அதமானேன்; நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்; அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன். சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே" என்று சொன்னார்.

அப்பொழுது சேராபீன்கள் எனப்படும் தூதர்களில் ஒரு சேராபீன் தூதன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து , ஏசாயாவிடத்தில்பறந்து வந்தான்.

அதினால், அவன் வாயை தொட்டு, "இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால்,



உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவர்த்தியானது" என்றான்.

அதன் பின்பு, "யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று கேட்கிற தேவனுடைய குரல் கேட்டது.

ஓர் அற்புதமான உணர்வு அவரை முழுவதும் ஊடுருவியது. ஒரு நொடியில் அவரது பாவங்கள் அவரை விட்டு நீங்கிற்று. தேவ ஆசீர்வாதத்திற்காக தேவனுக்கு ஏசாயா நன்றி சொல்லுமுன்னமே, தேவன் மென்மையாக அவரிடம் பேசினார். நம்மை தேவன் தம் பிள்ளைகளாக நினைப்பதினால், ஒரு தகப்பன் கனிவுடன் தன் பிள்ளையிடம் பேசுவதுபோல் தேவன் ஏசாயாவுடன் பேசினார். ஏனெனில், மக்களுக்கு தேவனுடைய வார்த்தைகளைச் சொல்வதற்காக அவர், "இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்" என்றார்.

ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கும் மேலாக ஏசாயா தேவனுடைய ஊழியத்தைச் செய்துகொண்டுதான் இருந்தார்; ஆனால், இப்போது

## செய்தி

**நான் தேவகிருபையால் தொடப்படும்போது,தேவன் என் பாவங்களை மன்னிக்கிறார்.**

அவருடைய வாழ்வில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. தேவனின் பிரசன்னம் அவரது வாழ்வில் மேலான மாறுதலைச் செய்திருந்தது. மற்றவர்களை மாத்திரம் பாவிகள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர் தன்னையும் அசுத்தன் என்று அறிக்கையிட்டார். தேவனுக்கு முன்பாகத் தன் நிலையை உணர்ந்ததால், தன்னைத் தாழ்த்தினார். தேவ ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்தார்.

ஏசாயா தன்னை உணராதிருந்த நிலையிலும் தேவன் அவர்மேல் அன்பாகத்தான் இருந்தார். உலகிலுள்ள ஒவ்வொருவரிடமும் தேவன் இவ்வாறு அன்பாகவே இருக்கிறார். அவர்களையும் திருத்தி, தம்முடைய ஊழியத்தைச் செய்ய அழைக்கிறார்.

என் அன்பு பிள்ளையே, தேவ ஊழியத் திற்கென்று உன்னை தேவடம் இன்றே அர்ப்பணிப்பாயா?

***செய்முறை:*** **'யாரை நான் அனுப்புவேன்?' என்று தேவன் கேட்டபோது, ஏசாயா சொன்னது என்ன? முக்கோனங்களில் உள்ள எழுத்துகளை அடித்துவிடு; பதில் கிடைக்கும்.**

## புதிர் 5

எ அ ன் க ை ட ன ர

____________________

அ வ னு ா ப் ல பு ந ம் ய

____________________

**பாடம் 5** **வண்ணம் தீட்டுக**



**பாடம் 6** **வண்ணம் தீட்டுக**



பாடம் 6

# கடிகாரத்தில் நீண்டநேரம்

***'தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர்' என்பதை எசேக்கியா ராஜா அறிந்துகொண்டதை இன்றைய பாடத்தில் பார்ப்போம்.***

எசேக்கியா ராஜா மிகவும் சுகமில்லாமல் இருந்தார். அவரது உடல்நிலை மிகவும் மோசமாகிக்கொண்டே வந்தது. மிகவும் பெலவீனமாக இருந்தார். எந்த மருந்தாலும் எந்த மருத்துவராலும் அவரது வியாதியைக் குணப்படுத்த முடியவில்லை. பொதுவாக எல்லா மருத்துவர்களும் சொல்வது போல்,எங்களால் முடிந்த அளவுக்கு வைத்தியம் செய்துவிட்டோம்; எல்லாச் சக்திக்கும் மேலான இறைவன் நினைத்தால் மட்டுமே சுகம் கிடைக்கும் என்று சொல்லிவிட்டனர். அப்படியானால் ஏதாவது ஓர் அற்புதம் நடக்க வேண்டும்!

எசேக்கியா நல்ல ராஜா என்று தேவனுக்கும் தெரியும். ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக ராஜாவுக்கு தேவன் சொல்லி அனுப்பிய செய்தி: "உன் வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்து; ஏனெனில் நீ பிழைக்கமாட்டாய்." ஏசா 38:1.

படுக்கை அறையில் எசேக்கியா ராஜா மிகவும் சோர்வுடனும், கவலையுடனும் படுத்திருந்தார். அவருடைய நோய் அவருக்கு மிகவும் வேதனையைத் தந்தது. அவர் மிகவும் நல்ல ராஜாவாக, தேவனுக்குப் பயந்தவராக வாழ்ந்தவர். வேதத்தின்படியும் தீர்க்கதரிசிகளின் சொற்படியும் மிகவும் கீழ்ப்படிந்து வாழ்ந்தவர். மேலும் தேவன்மேல் அளவற்ற நம்பிக்கை உள்ளவராகவும் வாழ்ந்தவர். தான் இறக்கப் போகும் செய்தியை தேவனிடமிருந்து தீர்க்கதரிசி ஏசாயா மூலம் அறிந்தபோது, அவர் மிகவும் கவலைப்பட்டார்.

எனவே, சுவற்றுப் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு,"ஆ! கர்த்தாவே, நான் உமக்கு முன் உண்மையும் மனஉத்தமுமாய் நடந்து,



**மனன வசனம்**

**தாம் சொன்ன இந்த வார்த்தையின்படி**
**கர்த்தர் செய்வார்.**
**ஏசாயா 38:8.**

உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்'' என்று ஜெபித்தவாறே மிகவும் தேம்பித்தேம்பி அழுதார்.

அவரது அழுகையையும் உருக்கமான ஜெபத்தையும், அங்கிருந்த அவரது ஊழியர்களும் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால், அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. இனி என்ன நடக்கப்போகிறதோ என அனைவரது உள்ளமும் வேதனையாலும் பயத்தாலும் நிறைந்திருந்தது.

தேவன் அந்த எசேக்கியா ராஜாவின்மேல்இரக்கம் கொண்டார். ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் மீண்டும் ஒரு செய்தியை



தேவன், ராஜாவுக்கு அனுப்பினார். ‘‘உன் ஜெபத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; உன் வாழ்நாளில் மேலும் 15 ஆண்டுகளை உனக்குக் கூட்டித்தருகிறேன்; இதோ, ஆகாசுடைய சூரியக்கடிகாரத்தில் பாகைக்குப் பாகை இறங்கின சாயையைப் பத்துப்பாகை பின்னிட்டுத் திருப்புவேன்: இதுவே கர்த்தர் உனக்குக் கொடுக்கும் அடையாளம்.''

ராஜாவை நன்கு கவனிக்குமாறு ஏசாயா தீர்க்கதரிசி ராஜாவின் ஊழியக்காரர்களிடத்தில் சொன்னார்; ஊழியக்காரர்களும் அவ்வாறே நன்கு கவனித்துக் கொண்டார்கள். மேலும் 15 வருடங்கள் எசேக்கியா ராஜா தொடர்ந்து தேவனுக்குச் சேவைசெய்தார்.

எசேக்கியா ராஜா இந்த அற்புதத்தை எழுதிவைத்தார். தன்னுடைய குடும்பத்தினருக்கும் இன்னும் பிறருக்கும் தேவன் தனக்காகச் செய்த அற்புதத்தைச் சொல்ல வாய்ப்புக் கிடைத்ததற்காக மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

‘‘கர்த்தர் என்னை இரட்சிக்க வந்தார்; ஆகையால் எங்கள்

## செய்தி

**தேவன் தம் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார்.**

ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப் பாடுவோம் என்று எழுதிவைத்தான்.'' ஏசாயா 38:20.

உலகில் வியாதியால் துன்பப்படுகிற, இறக்கிற மக்கள் ஏராளம் உண்டு. ஆனால், எசேக்கியா ராஜாவிற்கு நிகழ்வித்த அற்புதத்தை தேவன் எல்லாருக்கும் செய்துவிடுவதும் இல்லை. இருப்பினும் நம் யாவருக்கும் ஒரு நம்பிக்கை உண்டு. நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது, தேவனுக்குப் பிரியமாக உலகில் வாழ்ந்து இறந்தவர்களை தேவன் உயிரோடே எழுப்புவது நிச்சயம்!

செல்லமே, வியாதி, மரணம், துன்பம் எதுவுமே இல்லாத உலகம் வேண்டுமா?

**செய்முறை:** சிலநேரங்களில் எசேக்கியா ராஜாபோல நாமும் நம்பிக்கையற்று இருக்கிறோம். தேவன் மிகப்பெரிய ஓர் அற்புதம் செய்து அந்த ராஜாவுக்கு 15 வருடங்களைக் கூட்டிக்கொடுத்தார். கடிகாரம் பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பியதால் நிச்சயமாக அந்த அற்புதம் நிகழுமென ராஜா நம்பினார். கீழுள்ள கடிகாரங்களில் ஒன்றுபோல மணிகாட்டும் கடிகாரங்களைக் குறியுங்கள்.

**பதில் 6**



பாடம் 7

# களிமண் ஜாடி

*வேதாகமத்தில் களிமண்கொண்டு பாத்திரங்களைப்படைத்த ஒரு மனிதனைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. என்னவெனப் பார்ப்போமா?*

எரேமியா தீர்க்கதரிசியை தேவன் ஒருநாள் ஒரு குயவன் வீட்டிற்குச்செல்லுமாறு, சொன்னார். அவ்வாறே எரேமியாவும் ஒரு குயவனுடைய வீட்டிற்குச் சென்றார். அங்கே அந்தக் குயவன் மண்பாண்டங்களைச் செய்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

எரேமியாஅக்குயவன் செய்வதை மிக ஆர்வமாகக் கவனிக்க ஆரம்பித்தார். அக்குயவன் ஈரமான களிமண் குவியலில் ஓரளவுக்குக் கையில் எடுத்தான். பின்னர் அந்தக் களிமண்ணை மண்பானை செய்யும் திரிகையில் நடுவில் வைத்தான். தனது ஆடைகளை முழங்கால் வரையிலும் நன்றாகச்



சுருட்டிவைத்துக் கொண்டான். இப்போது திரிகையைச் சுழல விட்டான். திரிகையில் களிமண் சுழலும் காட்சி பார்க்க அழகாக இருந்தது.

மாற்றிமாற்றி அக்களிமண் பிசையப்பட்டதால் அம்மண் மிகவும் மிருதுவாயிற்று. அவ்வப்போது தனது கைகளைத் தண்ணீரில் நனைத்துக் கொண்டான். பிசைந்த அக்களிமண்ணை அப்படியும் இப்படியுமாகத் தட்டினான். பின்னர் தான் விரும்பிய பல்வகையான மண்பாத்திரங்களைச் செய்ய ஆரம்பித்தான். ஜாடிகள் செய்தான். பெரிய பானைகள் செய்தான்.

அவ்வாறு குயவன் மண் பாத்திரங்களைசெய்து கொண்டிருக்கும்போதே அவற்றுள் சில நன்றாக வடிவமைக்கப்படாமல் சரியில்லாமல் போயிற்று; உடனே அக்குயவன் அதைத் தட்டியும், மண்ணை மீண்டும் பிசைந்தும் திரிகையில் சுழல விட்டும் கோணலானவற்றைச் சரிசெய்தான்.

அவ்வாறு அக்குயவன் மீண்டும் வேறுபாண்டமாக வனைந்தபோது, மண்பாண்டம் அழகாக உருவானது.

**மனன வசனம்**

**கர்த்தாவே நீர் எங்களுடைய பிதா; நாங்கள் களிமண்;**
**... நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.**
**ஏசாயா 64:8.**

எரேமியா தீர்க்கதரிசி மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மிகவும் கவனமாகவும் அக்கறையாகவும் நேர்த்தியாகவும் அக்குயவன் மண்பாத்திரங்களை வனைந்து கொண்டிருந்தார். அவ்வழியே செல்வோர் எரேமியா தீர்க்கதரிசியைப் போலவே இவ்வாறு அக்குயவனின் வேலையை ரசித்தவாறு சென்றனர்.

மண்பாண்டம் விரும்பி வாங்கும் பலர் வந்தனர்; அவரவருக்குத் தேவையான மண் பாண்டங்களை வாங்கிச் சென்றனர். பெரிய மண்பானைகளைச் சிலர் வாங்கினர். சிலர் சிறிய ஜாடிகளை வாங்கினர்.

குயவன் அவ்வாறு மண் பாண்டங்களை வனையும் போது, சில பாத்திரங்களின் வாய், கோணலாயிற்று; அப்போது அவன் அதைத் திருத்தி வனைந்தான்.

அவ்வாறு அவன் அம் மண்பாண்டத்தைத் திருத்தமாக வனைந்தபோது அப்பாண்டம் பார்வைக்கு அழகானதாகவும், பயனுள்ள பாண்டமாகவும் உருவானது.

ஆனால், அவ்வாறு அது உருவாவதற்கு குயவனின் தட்டு தலுக்கும் பிசைதலுக்கும் மீண்டும் திரிகையில் அக்குயவன் வனைவதற்கும் அவனது கையில் அடங்கியிருக்க வேண்டியதாயிருந்தது.

எரேமியா தீர்க்கதரிசிக்கு தேவன் தன்னை ஏன் அங்கு அனுப்பினார் என்பதற்கான காரணம் இப்போது நன்கு புரிந்தது.

தேவன் நம்மை உருவாக்கும் ஒரு குயவன். நாம் அவருடைய கையிலுள்ள களிமண். நம் ஒவ்வொருவரையும் சிறந்த ஒரு மனிதராக உருவாக்க தேவன் ஆவலாக இருக்கிறார். நம்மில்



## செய்தி

**தேவன் என்னை அவருடைய கைகளுக்குள்ளாக வைத்து என்னை உருவாக்குகிறார்.**

காணப்படும் சிறிய பெரிய குறைகளை தேவன் நம்மில் நீக்கினால்தான் நாம் சிறப்பானவர்களாக விளங்கமுடியும்.

எண்ணை, தண்ணீர், மாவு வைக்க, உணவு சமைக்க என்று அக்குயவன் செய்த பாத்திரங்கள் ஏராளமான காரியங்களுக்கு உதவியாக இருந்தன.

கண்ணே, தேவன் நமக்கு எரேமியா மூலமாக உணர்த்த விரும்புவது என்னதெரியுமா?

தேவனுடைய கைளுக்குள் நாம் அடங்கியிருந்து அவர் சித்தப்படி நடக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். அப்படியானால், நாம் தேவனுக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியைத் தருபவர்களாக வாழமுடியும். சிறப்பாகவும் திகழலாம்.

***செய்முறை:***

**குயவன் களிமண்ணினால் ஒரு பானையை வனைவதுபோல தேவன் நம்மை வனைகிறார். ஓர் உன்னத நோக்கத்திற்காக அவர் நம்மை சிறப்பானவர்களாக வனைகிறார். கீழே வரையப்பட்டுள்ள பானையை முழுவதுமாக வரைந்து வண்ணந் தீட்டுங்கள்.**



**புதிர் 7**

பாடம் 7

வண்ணம் தீட்டுக



பாடம் 8

வண்ணம் தீட்டுக



8 பாடம்

# நெகேமியா-தேவ ஊழியர்

***ஆலயத்தைப் புதுப்பிக்கவேண்டும். வேதாகமத்தில், எருசலேம் மதில்களைச் சீராக்குவதற்குத் தேவையான உதவியை ராஜாவிடமே நெகேமியா கேட்டார்.***

“ஆனானி, உன்னை மீண்டும் பார்ப்பது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?” என்ற நெகேமியா தன் சகோதரனைத் தழுவிக்கொண்டார். அப்போதுதான் யூதாவிலிருந்து, ஆனானியும் வேறு சிலரும் வந்திருந்தார்கள்.

நெகேமியா அவர்களிடம் தன் தேசமாகிய எருசலேமைப் பற்றி ஆர்வமாக விசாரித்தார். ஆனால், “எருசலேம் நகரம் இடிபட்டதும் அதின் மதில்கள் சுட்டெரிக்கப்பட்டதுமாய் இருக்கிறது” என்று அவர்கள் சொல்லக்கேட்ட நெகேமியா வேதனையோடு உட்கார்ந்துவிட்டார்.



சிலவாரங்கள் கழித்து நெகேமியா வேதனையோடு புலம்பி, உபவாசித்து ஜெபித்தார். “ஆண்டவரே! என்னுடைய ஜெபத்தைக் கேட்டருளும்; எருசலேம் தேசத்தை நினைத்தருளும்; ராஜாவிடத்தில் உதவி கேட்கும்போது, தேவரீர் ராஜாவின் உள்ளத்தில் பேசி அவர் என் வார்த்தைகளுக்குச் சம்மதிக்க உதவும்; தயவுசெய்யும்” என்று கெஞ்சினார்.

ஒருநாள் மாலை நெகேமியா தன் வழக்கப்படி, ராஜாவுக்குத் திராட்சரசம் கொடுத்துக்கொண்டிருந்தார்.

அப்போது ராஜா மிகவும் சோர்வாயிருந்த நெகேமியாவிடம், “ஏன், நீ துக்கமாக இருக்கிறாய்? வியாதியாகத் தெரியவில்லையே, என்ன கவலை உனக்குச் சொல்” என்று மிகவும் பரிவுடன் கேட்டார்.

ராஜாவின் முன்பாக நிற்கும் அந்த வேளையிலும் நெகேமியா மனதிற்குள் தேவனிடம் ஜெபித்தார்.

பின்னர், “ராஜாவே! நீர் என்றும் வாழ்க; என் தேசமாகிய எருசலேம்

## மனன வசனம்

**தேவனுடைய தயவுள்ள கரம்**
**என்மேல் இருந்தது.**
**நெகேமியா 2:8.**

பாழாய்க்கிடக்கிறது. அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டவைகளாய்க் கிடக்கிறது'' என வேதனையோடு சொன்னார்.

"நான் உனக்கு என்ன உதவி செய்யவேண்டும்?'' என்று ராஜா கேட்டார் .

அப்போது நெகேமியா மனதிற்குள் தேவனைத் துதித்துக் கொண்டே, ஜெபித்தார். பின்னர், ராஜாவிடம், "என் தேசத்தின் மதில்களைத் திரும்பவும் கட்டுவதற்கு உதவவேண்டும். கட்டுவதற்குத் தேவையான மரங்களைத் தருமாறு, வனத்துக் காவலாளனாகிய ஆசாபுக்கு ஒரு கடிதம் தரவேண்டும்'' என்று கேட்டார்.

ராஜாவும் நெகேமியா கேட்டுக்கொண்டபடியே கடிதம் எழுதிக்கொடுத்தார். அதுவுமன்றி, நெகேமியாவுடன் தம் அதிகாரிகளை வழித்துணையாக அனுப்பிவைத்தார். நெகேமியாவின் நீண்ட பயணத்துக்குத் தேவையான யாவையும் ஏற்பாடு செய்தார்.

தேவனுடைய கிருபையினாலும், ராஜாவின் உதவியினாலும் நெகேமியா சுகமாக எருசலேம்வந்து சேர்ந்தார்.

மூன்று நாட்களுக்குப் பின், ஓர் இரவில் கழுதையின்மேல் ஏறிச்சென்று பழுதுபட்டுக் கிடக்கும் நகரத்தைப் பார்வையிட்டார். அவ்வழியாகச் செல்வதே அவருக்குச் சிரமமாக இருந்தது.

பின், அதிகாரிகளைச் சந்தித்து நெகேமியா பேசினார். ராஜாவிடம் தான் பெற்று வந்த உத்தரவுகளைச் சொன்னார். "நாம் மீண்டும் நம் நகரத்தின் மதில்களைக் கட்டுவோம்!'' என மக்களை உற்சாகப்படுத்தினார்.

யாவரும் மகிழ்ச்சியுடன் கட்ட ஆரம்பித்தார்கள்; எதிரிகள் இடைஞ்சல் செய்தனர்; கட்டுவதைத் தடுத்து யூதர்களை அழிக்கப்பார்த்தனர். ஆனால்,



## செய்தி

**தேவனுடைய சித்தப்படி செய்ய தேவன் எனக்கு வல்லமையையும் கிருபையையும் அளிக்கிறார்,**

தேவன் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டார். அந்த எதிரிகளை நெகேமியாவும் அவருடைய மக்களும் வென்றார்கள். அவ்வப்போது எதிரிகள் தீங்கு செய்ய முற்பட்டுக் கொண்டேயிருந்தனர். ஆனாலும் நெகேமியா இடைவிடாமல் தேவனைப் பற்றிக்கொண்டே இருந்தார். தேவனிடம் ஜெபிப்பதை நிறுத்தவில்லை. 52 நாட்களில் கட்டட வேலை முடிந்தது. தேவன் எல்லா வகையிலும், தம்முடைய பிள்ளைகளுக்கு உதவினார்; ராஜாவின் கண்களில் தயை கிடைக்கப் பண்ணினார். ராஜாவிடம் உதவிகேட்க நெகேமியாவுக்குத் தைரியம் தந்தார்.

என் செல்லமே, அதே தேவன் உனக்கும் உதவிசெய்ய ஆவலோடிருக்கிறார்!

***செய்முறை:*** **நெகேமியா தேவனுடைய உதவியோடு எதைக் கட்டினார்? கீழுள்ள அடையாளக் குறிகளுக்கு பொருத்தமான எழுத்துகளை எழுதினால் பதில் கிடைக்கும்.**

___ ◙  ___ ▶  ___ ♦  ___ ▲  ___ ⊡  ___ ▼  ___ ●



___ ◀  ___ ♫  ___ ♪  ___ ♣  ___ ♠  ___ ♥



**பதில் 8**

| ரு | ே | மி | ம | ன் | ல | எ | ை | க | ள | ச | ல் | தி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ▶ | ▲ | ▼ | ◀ | ● | ⊡ | ◙ | ♠ | ♣ | ♥ | ♦ | ♪ | ♫ |

________________________________

________________________________

பாடம் 9

# எதிர்காலத்து நம்பிக்கை

***ராணியிடம் சூசன் ஓடிவந்து தனக்கு சைக்கிள் ஓட்ட கற்றுத்தருமாறு கெஞ்சினாள். நாளைக்குக் கண்டிப்பாகக் கற்றுத்தருகிறேன் என்ற ராணி, மறுநாள் கற்றுத்தரவில்லை; அப்படியானால், ராணி தன் வாக்கைக் காப்பாற்றினாளா?***

தேவன் ஒருபோதும் தம் வாக்கை நிறைவேற்றத் தவறியதே இல்லை. தாம் சொன்னதைச் செய்வதற்கு தேவன் எப்போதும் ஆயத்தமாகவே இருக்கிறார்.

யூதர்களை மீட்கவும், காப்பாற்றவும், சமாதானத்தைத் தரவும் தேவன் அவர்களுக்கு ஒரு ராஜாவைத் தரப்போவதாக, வாக்குப்பண்ணினார். அந்த ராஜா எங்கே பிறப்பார் என்றும் மீகா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

‘‘எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேமே, நீ யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள் சிறியதல்ல; இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டுவருவார்; ’’ மீகா 5:2.

இந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொல்லி, 700 வருடங்களுக்குப் பின்னர், பெத்லகேமில் ஒரு குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தையின் பிறப்பை தேவதூதர்கள் வானத்திலிருந்து அறிவித்தார்கள். அதை, தேவபிள்ளைகள் தங்கள் காதுகளால் கேட்டனர். இந்தக் குழந்தையின் தந்தை தேவன். ‘‘அவருக்கு இயேசு என்று பெயரிடுங்கள்; ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களைநீக்கி அவர்களை இரட்சிப்பார்.’’ மத்தேயு 1:20. ‘‘அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்; ... இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார்’’ என்று அர்த்தமாம். மத் 1:23.

தேவன் தாம் மீகா தீர்க்கதரிசியின்மூலம் சொல்லிய வாக்கை நிறைவேற்றினார். ‘‘அவர் நின்றுகொண்டு,



**மனன வசனம்**

**கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன வார்த்தைகளிலெல்லாம் ஒன்றையும் தவறவிடவில்லை.**

**யோசுவா 23:14.**

கர்த்தருடைய பலத்தோடும் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார்; ஆகையால், அவர்கள் நிலைத்திருப்பார்கள்; அவர் இனிப் பூமியின் எல்லை பரியந்தமும் மகிமைப்படுவார்''. மீகா 5:4. இந்த வாக்குறுதி யூதர்களுக்கு விருப்பமானதாக, ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது. ஏனெனில், யூதர்கள் அநேக வருடங்களாக அடிமைகளாகத் துன்பம் அனுபவித்துக்கொண் டிருந்தார்கள்.

கர்த்தராகிய இயேசு இப்பூமியில், வாழ்ந்த நாட்களில், மீகாவின்மூலம் தேவன்கூறிய வாக்கு நிறைவேறியது. எப்படியெனில்,''நானே நல்ல மேய்ப்பன்;... ஆடுகளுக்காக



என் ஜீவனையும் கொடுக்கிறேன்'' என்று இயேசு சொன்னார். யோவான் 10:14,15.

அவ்வாறே நம் இயேசு தேவன், பாவிகளாகிய நமக்காகத் தமது ஜீவனையே கொடுத்தார். 1கொரி 15:3.

இயேசுவைப்பற்றி தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாக அதிகம் வெளிப்படுத்தியுள்ளார். மக்களுடைய பாவங்களிலிருந்து, அவர்களை விடுவிக்க இயேசு மிகவும் துன்பமடைந்தார்; கடைசியில் தம் ஜீவனையும் தந்தார். ஏசாயா 53:3,5,6. ஆம்! உண்மையாகவே நம் தேவன் உன்னையும் என்னையும் இரட்சிக்கவே தம்முடைய ஜீவனை விட்டார். எப்போதும் தேவன் தம் வாக்கைக் காப்பாற்றுகிறவர்!

ஓர் ஓய்வுநாளிலே இயேசு தம்மைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசி எழுதிய பகுதியை ஆலயத்தில் வேதாகமத்திலிருந்து வாசித்தார்.

சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க, கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங் கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,

## செய்தி

**தேவனுடைய வாக்குகள் உண்மையானவை. ஏனெனில், இதுவரையிலும் தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேறியுள்ளன.**

கட்டுண்டவர்களுக்குக் கட்ட விழ்த்தலையும் ... செய்யவும் வந்தார். ஏசாயா 61:1. இந்தப் பகுதியை இயேசு அக்காலத்தில் வேதவசனங்கள் எழுதியிருந்த தோற்சுருளிலே வாசித்து, ‘‘உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று’’ என்றார். மக்கள் ஆலயத்திலே, அவ ரையே பார்த்துக்கொண்டிருந் தார்கள். லூக் 4:21. நான் சத்திய முள்ள தேவன்; என் வார்த்தை கள் உண்மையாயிருக்கிறது, என்று அவர் சொன்னது உண்டு.

என் கண்மணியே! இது கடைசிக்காலம்; வருவதாகச் சொல்லிச்சென்ற தேவன், தூதர்கள் சொல்லியபடியே, எவ்விதமாக வானத்திற்குச் சென்றாரோ, அவ்வண்ணமே திரும்பி வருவார்; நம்மை அழைத்துச்செல்வார். யோவான் 14:3.

*செய்முறை:* **வேதாகமத்தின் வாக்குத்தத்தங்களை நாம் ஏன் நிச்சயமாக நம்பலாம்? பாடத்தை வாசியுங்கள். கீழே வார்த்தைகளில் ஒழுங்கற்றுக் கிடக்கும் வார்த்தைகளை ஒழுங்காக்கினால், பதில் கிடைக்கும்.**




**புதிர் 9**

## பாடம் 9

வண்ணம் தீட்டுக



## பாடம் 10

வண்ணம் தீட்டுக



10 பாடம்

# பேச்சற்றவராகி விட்டாரே!

***இன்றைய வேதாகமப் பாடக்கதையில் தேவனிடமிருந்து செய்தியைப் பெற்ற ஓர் ஆசாரியனைப் பார்க்கப்போகிறோம். ஆனால், அவர் பேச முடியாமற்போயிற்று.***

யூதேயாதேசத்தின் மலைப் பகுதியில், சகரியா என்ற ஓர் ஆசாரியரும் அவர் மனைவி எலிசபெத்தும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தேவனை மிக மிக அதிகமாக நேசித்தனர். ஒரு குழந்தை வேண்டுமென்று அதிகம் ஆசைப்பட்டார்கள்; ஆனால், குழந்தை பிறக்கவே இல்லை. இருவரும் இப்போது வயதானவர்களாகி விட்டார்கள்.

சகரியா தேவனுடைய ஆலயத்தில் ஊழியம் செய்யவேண்டிய காலம் வந்தது; எனவே, தனது ஆசாரிய வேலையைச் செய்வதற்காக அவர் ஆலயத்தினுள் சென்றார்.

ஆலயத்தில் தேவனுக்குத் தூபம் காட்டி, இஸ்ரவேல் மக்களுக்காக ஜெபித்துக்கொண்டிருந்தார். மக்கள் வெளியே ஜெபித்துக் கொண்டிருந்தனர். தூபப்பலிபீடத்தின் அருகே திடீரென ஒரு தேவதூதன் தோன்றினான்.

தூதனைக்கண்ட சகரியா குழம்பிப் பயந்தார். ஆனால், தூதன், ‘‘சகரியாவே, பயப்படாதே! உங்கள் இருவருடைய ஜெபமும் கேட்கப்பட்டது; எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்; அவன் பெயர் யோவான்; அவனுடைய பிறப்பினால் அநேகர் மகிழ்ச்சி அடைவார்கள். அநேக மக்களை அவன் கர்த்தரிடத்தில் திருப்புவதற்கு உதவியாயிருப்பான்’’ என்று தூதன் சொன்னான்.

‘‘சொல்வதெல்லாம் உண்மை என்று எப்படி எனக்குத் தெரியும்? நானும் என் மனைவியும் வயதானவர்களாக இருக்கிறோமே?’’ என்றான்.

‘‘இந்த நற்செய்தியைச் சொல்லுமாறு தேவன் என்னை அனுப்பினார்; இவைகளை நீ நம்பாதபடியினால், உனக்குக் குழந்தை பிறக்கும்வரை நீ வாய்



## மனன வசனம்

**இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்உண்டாவதாக.**

**லூக்கா 1:68.**

பேசாமலிருப்பாய்'' என்று கூறிய தேவதூதன் பின்னர் மறைந்துவிட்டான்.

ஆலயத்தினுள் சென்று வெகுநேரமாகியும் சகரியா வெளியே வராததினால், மக்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

வெளியே வந்த சகரியா வாய்பேச முடியாதவராக சைகையின்மூலம் மக்களுடன் பேசி அவர்களை ஆசீர்வதித்தார். அதனால், சகரியா தேவனிடமிருந்து ஒரு தரிசனத்தைப் பெற்றிருக்கிறார் என்று மக்கள் அறிந்துகொண்டார்கள்.

தனது ஊழியக்காலம் முடிவடைந்த பின்னர் அவர் வீட்டிற்குச் சென்றார்; பேச முடியாததால், மனைவியிடமும் பிறரிடமும் சைகைமூலம் நடந்தவற்றைக் கூறினார்.

தேவன் சொன்னவாறே,



அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது; குழந்தைக்கு என்ன பெயரிடலாம் என்று ஒருவருக்கொருவர் யோசித்துக்கொண்டிருந்தனர். அப்போது சகரியா, ஒரு எழுத்துப் பலகையில் 'இவன் பெயர் யோவான்' என்று எழுதினார். உடனே அவர் வாய் திறந்தது; முன்போலவே நன்றாகப் பேசத் தொடங்கினார். இவற்றைக் கண்ட மக்கள் பயமடைந்தனர்; ஆனாலும் தேவனை மகிமைப்படுத்திப் புகழ்ந்தனர். சகரியா தேவனைப் புகழ்ந்து பின்வருமாறு பாடினார்.

“இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர் நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கு தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளினார். ஆபிரகாமுக்கு தேவன் வாக்குப்பண்ணினபடியே செய்தார். தம்முடைய மக்களைச் சந்தித்தார்; எதிரிகளின் கையிலிருந்து அவர்களை மீட்டார். தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு ஓர் இரட்சண்யக்

## செய்தி

**தேவனின்அன்பையும் அவர் செய்த நன்மைகளையும் பிறரிடம் சொல்லும்போது தேவனைத் தொழுகிறோம்.**

கொம்பை ஏற்படுத்தினார்'' என்றெல்லாம், தேவனைப் புகழ்ந்தார். அதுவுமன்றி, தம்முடைய மகன் யோவானைக் கையில் எடுத்துக்கொண்டு தேவன் வெளிப்படுத்தியதையும் சொன்னார்.

''நீயோ பாலகனே உன்னதமானவருடையதீர்க்கதரிசிஎன்னப் படுவாய்; நீ கர்த்தருக்கு வழியை ஆயத்தம்பண்ணுவாய்''.

இவ்வாறு சகரியா மற்றவரிடமும் தேவன்மீது தமக்கு உள்ள அன்பைப் பகிர்ந்து, தேவனைத் துதித்தார்.

என் செல்லமே! நாமும் அவ்வாறு தேவனை மகிமைப்படுத்த வேண்டும்; அதற்கு ஒரே வழி, தேவனைத் தொழுவதுதான்.

***செய்முறை:*** **தன் மகன் பிறக்கும் வரைக்கும் சகரியாவால் வாய்பேச முடியவில்லை. குழந்தை பிறந்தபோது, சகரியா எழுதிக் காண்பித்தது என்ன? கீழுள்ள குறிகளையும் எழுத்துகளையும் பயன்படுத்தி, பதிலைக் கண்டுபிடியுங்கள்.**

___ ___ ___   ___ ___ ___ ___
→ ⇧ ⇦   ⇨ ↑ ⇩ ↓

___ ___ ___ ___ ___ ___
← ⇩ ◆ ⇧ ◆ ⇦

## புதிர் 10

| | | |
|---|---|---|
| ன் ⇦ | ெ ⇨ | வ ⇧ |
| ய ⇩ | ே ← | இ → |
| ப ↑ | ர் ↓ | ஏ ◆ |



பாடம் 11

# சொல்லாமலிருக்க முடியாது

***தனக்கென, தேவன் வைத்திருந்த திட்டத்தை அறிந்துகொண்டபோது, ப்ரீத்திக்குப் பிறரிடம் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இன்றைய வேதாகமப் பாடக்கதையிலும் சொல்லத் துடித்த ஒரு பெண்ணைப் பார்க்கப் போகிறோம்.***

மரியாளுக்குத் திருமண ஏற்பாடுகள் வேகமாக நடந்து கொண்டிருந்தன. விருந்தினரை எப்படியெல்லாம் சிறப்பாக உபசரிக்க முடியும் என்பதுபற்றி ஒருவேளை மரியாள் யோசித்துக் கொண்டிருந்திருக்கலாம். அல்லது, தனக்கு மாப்பிள்ளையாக வரஇருக்கும் யோசேப்புக்காக ஜெபித்துக்கொண்டிருந்திருக்கலாம்.

அப்போது, திடீரென்று மரியாள் இருந்த அறையில் ஒரு



தேவதூதன் தோன்றினான். சகரியாவுக்குக் காட்சியளித்த காபிரியேல் என்னும் அதே தூதன்தான் மரியாளிடமும் வந்தான் என்று வேதம் சொல்லுகிறது. லூக்கா 1:26-28.

“கிருபை பெற்றவளே வாழ்க! கர்த்தர் உன்னோடிருக்கிறார்!” என்று வாழ்த்தினான்.

அந்த வாழ்த்துதலைக் கேட்ட மரியாள் பயந்து நடுங்கினாள். அவளிடம், “பயப்படாதே தேவனிடத்தில் நீ கிருபை பெற்றாய்; இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. உலக மக்களுடைய பாவங்களை நீக்கி இரட்சிக்கும் இரட்சகராக உன் பிள்ளை இருக்கும்.

உனது இனத்தாளாகிய எலிசபெத்துக்கும் தேவன் அற்புதம் செய்திருக்கிறார்; அவளுக்கு இது ஆறாவது மாதம்” என்று அந்தத் தேவ தூதன் கூறினான்.

அதைக் கேட்ட மரியாள், “நான் ஆண்டவருக்கு அடிமை; உம்முடைய வார்த்தையின் படியே எனக்கு ஆகக்கடவது” என்றாள்.

## மனன வசனம்

**என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது; என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது.**

**லூக்கா 1:46,47.**

தேவதூதன் சென்ற பின்னும் மரியாள் நிச்சயமாக தூதன் சொல்லிய காரியங்களைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்திருப்பாள். நம்பக் கடினமான செய்தி; ஆனால் தேவதூதன்மூலம் தேவனிட மிருந்து வந்ததால் நம்பினாள். மேலும் வயது முதிர்ந்த எலிசபெத்து குழந்தை உண்டாகி யிருக்கும் செய்தியானது அவளுக்கு ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் அளித்தது.

தான் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட இந்த மேன் மையான செய்தியை மனதில் அடக்கிவைத்துக் கொண்டிருக்க முடியவில்லை. உடனே அதைச்சொல்ல அவள் விரும்பினாள். ஓடிப்போய் எல்லாவற்றையும் எலிசபெத்தி டம் சொல்ல வேண்டும்போல் இருந்தது.

தேவையானவற்றை மரியாள் எடுத்துக்கொண்டு எலிசபெத்தைச் சந்திக்கச் சென் றாள். சகரியாவின் வீட்டிற்குள் சென்ற மரியாள், எலிசபெத்தை வாழ்த்தினாள். மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டபோது எலிசபெத்தின் வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று.

அப்போது எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிறைந்த வளாய், "உரத்தச் சத்தமாய்: ஸ்திரீகளுக்குள் நீ ஆசீர்வதிக் கப்பட்டவள்; உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது" என்று மரியாளை வாழ்த்தி னாள்.

அப்போது மரியாள், "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப் படுத்துகிறது; என் ஆவி இரட்ச கராகிய தேவனுக்குள் களிகூரு கிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார் கள்" என்று கூறினாள்.

அந்தப்பெண்கள் இருவ ரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தேவன்மேல் தங்களுக்கு உள்ள நம்பிக்கையை



## செய்தி

**தேவன்மேல் எனக்குள்ள அன்பைப் பிறரிடம்**
**நான் சொல்லும்போது தேவனை நான் தொழுகிறேன்.**

அறிக்கையிட்டுக் கொண்டும் தேவனை மகிமைப்படுத்திக் கொண்டும் இருந்தார்கள். எலிசபெத்தின் வீட்டிலே மரியாள் மூன்றுமாதம் தங்கியிருந்தாள். எலிசபெத்திற்குக் குழந்தை பிறக்கும் முன்னமே மரியாள் தன் ஊருக்குச் சென்றுவிட்டாள்.

தேவனால் தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தை சிறப்பானதாகத்தான் இருக்கும் என்று மரியாள் நம்பினாள். மரியாளுக்கும் யோசேப்புக்கும் தேவதூதன் மூலமாய்க் கிடைக்கப்பெற்ற செய்தி மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

செல்லமே! தேவன் உன் வாழ்விலும் அநேக நன்மைகளைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். தேவனின் அன்பை நீயும் பிறருக்குச் சொல்வாயா?

**புதிர் 11**

***செய்முறை:*** **தாயாகவிருந்த இரண்டு பெண்களின் பெயர்களை கீழுள்ள வார்த்தைகளிலிருந்து கண்டுபிடியுங்கள். எழுத்துகள் மாறிக்கிடக்கின்றன. ஒவ்வொரு வார்த்தையிலும் முதல் எழுத்தை அடியுங்கள்; பிறகு, ஒரு எழுத்துவிட்டு ஒரு எழுத்தை அடித்தால் பதில் கிடைக்கும்.**



**மைச்ரிவயசிரான்ள்ற**

**சஎஅலிர்சண்னெபாத்ஜதுே**

_____ _____ _____ _____ _____     _____ _____ _____ _____ _____

## பாடம் 11 வண்ணம் தீட்டுக



## பாடம் 12 வண்ணம் தீட்டுக



12 பாடம்

# உனக்குக் கேட்கிறதா?

***இன்றைய வேதாகமப் பாடக்கதையில் திறந்த வானவெளியில் இரவில் தங்கியிருந்த சில மனிதரைப்பற்றி நாம் பார்க்கப்போகிறோம். அப்போது நடைபெற்ற ஒரு மேலான காரியம் என்னவென்று பார்ப்போமா?***

தேவனுடைய வாக்கு ஒரு நாளும் பொய்யானதில்லை; குழந்தையாக இயேசு பெத்லகேமிலே பிறப்பார் என்று 700 வருடங்களுக்குமுன் மீகா தீர்க்கதரிசி சொன்ன விதமாகவே இயேசு பிறந்தார். பெத்லகேமிலே, மரியாளுக்கும் யோசேப்புக்கும் மகனாகப் பிறந்தார்.

ராஜாவின் கட்டளைப்படி குடிக்கணக்கு எழுதுவதற்காக அனைவரும் பெத்லகேமுக்கு வரவேண்டியிருந்தது. எனவே, பெத்லகேமில் உள்ள எல்லா விடுதிகளும், சத்திரங்களும் மக்களால் நிரம்பி வழிந்தது. யோசேப்புக்கும் மரியாளுக்கும் பெத்லகேம் சத்திரத்தில் தங்குவதற்கு இடம் கிடைக்கவில்லை.



மரியாளுக்கு இயேசு பிறக்கவேண்டிய நேரம் மிக நெருங்கிவிட்டது; எனவே, கிடைத்த ஒரு மாட்டுத் தொழுவத்தில்தான் அவர்கள் தங்க நேரிட்டது.

அந்த மாட்டுத் தொழுவத்தில் இயேசு பிறந்தார். குழந்தையைத் துணிகளில் சுற்றினார்கள்; முன்னணையில் பிள்ளையைப் படுக்கவைத்தனர்.

இஸ்ரவேல் ராஜாவின் படுக்கை வித்தியாசமானதாக ஏழ்மையானதாக இருந்தது. அந்தச் சிறிய குடும்பத்தை தூதர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அன்றைய இரவிலே தேவனின் வழிநடத்துதலின் படியே ஒரு செய்தி வெளியாயிற்று.

மலைப்பகுதியின் அருகே சில மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். இரவெல்லாம் கண்விழித்து ஆட்டு மந்தையைக் கவனித்துக்கொள்வது கடினமான ஒரு வேலைதான். ஏனெனில், காட்டு மிருகங்கள் ஆடுகளைளைத் தாக்கும்

**மனன வசனம்**

**உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்
பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக.
லூக்கா 2:14.**

அபாயம் இருந்தது; எனவே, மந்தைகளைக் காப்பதைத் தங்களது பெரிய பொறுப்பாக எண்ணி மேய்ப்பர்கள் விழிப்புடன் இருந்தார்கள்.

அவ்வாறு அவர்கள் கவனமாயிருந்தபோதே பழைய தீர்க்கதரிசனங்களைக்குறித்து பேசிக்கொண்டிருந்தார்கள். இவையெல்லாம் எப்போது நடைபெறும் என்று ஏக்கத்தோடே ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டார்கள்.

அப்போது, திடீரென்று மிகுந்த வெளிச்சம் தோன்றியது; ஒரு தேவதூதன் அங்கு வந்து நின்றான்; அவனுடைய பிரகாசம் பளீரென்று இருந்தது. தேவதூதர்கள் தூதனைக்கண்டு பயந்தார்கள். அந்தப் பரலோக வெளிச்சம் அந்த மேய்ப்பர்கள் மேலும், ஆடுகள்மேலும், புல்தரைமேலும் பளீரென்று ஒளி வீசிக்கொண்டிருந்தது; பயமும் மிகுந்த சந்தோஷமும் கலந்தவர்களாய் அந்தத் தூதனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பரலோக மகிமையால் அவ்விடம் நிறைந்திருந்தது. கரடி, சிங்கம், புலி இவற்றின்மேல் உள்ள பயத்தைக் காட்டிலும், இப்போது பயம் அதிகமாகி நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது தூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்.

அக்கணமே பரம சேனையின் திரள் தோன்றியது; தூதர்களின் கூட்டம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தேவனைப் புகழ்ந்து தேவ தூதர்கள்



**செய்தி**

**இயேசுவைப்பற்றிய நற்செய்தியைக் கேட்கும்போது நான் தேவனைத் தொழுகிறேன்.**

பாடல் பாடினார்கள்.

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.

பின்னர் தூதர்கள் அந்த மேய்ப்பர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்திற்குப் போய் விட்டார்கள். பட்டென்று அந்தப் பரலோகப் பேரொளி அவர்களை விட்டு நீங்கியது.

பிரமித்துப்போன அந்த மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். தூதர்கள்மூலம் கேள்விப்பட்ட பரலோக ராஜாவைப் பார்க்கப் புறப்பட்டார்கள். கண்மணியே! நாமும் போவோமா?

*செய்முறை:* **இந்தவார மனப்பாட வசனத்தை வாசித்து, கோடிட்டுள்ள இடங்களை நிரப்புங்கள்.**

## புதிர் 12

**உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு**

**____________________**

**பூமியிலே ____________________,**

**மனுஷர்மேல்**

**____________________**

**உண்டாவதாக.**



13 பாடம்

# சந்தோஷத்தைப் பரப்புவோம்

***நம் பாடக்கதையில் ஒரு குழந்தையைப்பார்க்க ஆவலோடு சென்ற சிலரைப்பற்றிப் பார்ப்போமா?***

தேவதூதர்கள் மறைந்து போன பின்னரும் அந்தப் பரலோகக் காட்சியும், இனிய பாடலும் மேய்ப்பர்களின் மனதை விட்டு நீங்கவில்லை.

கேள்விப்பட்ட அந்த மேலான செய்தி அவர்கள் காதுகளிலே தேனாக ஒலித்துக் கொண்டிருந்தது. மந்தையைக் காக்கவேண்டும் என்பதையெல்லாம் மறந்துவிட்டனர்; தேவதூதர்கள் சொல்லிய அந்தப் பரலோகக் குழந்தையைப் பார்க்க வேண்டும்; அந்தப் பரலோக ராஜாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசைமட்டுமே மனதில் மேல் ஓங்கி நின்றது.

எனவே, பெத்லகேமை நோக்கி விரைந்தனர்; அச்செய்தியைத் தங்களுக்குள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கக் கொஞ்சமும் அவர்களால் முடியவில்லை.

போகும் வழியில், இயேசுவைப்பற்றிப் பேசிக் கொண்டேதான் சென்றார்கள். ‘‘முன்னணைஎன்று தூதர்கள் சொன்னார்களே, அப்படியானால் கால்நடைகள் தங்கும் இடமாகத்தான் இருக்கவேண்டும்’’ என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

தொழுவத்தினுள் மேய்ப்பர்கள்அமைதியாக நுழைந்தனர்; நுழைந்தபோது அவர்களுக்கு எப்படியிருந்திருக்கும்? தூதர்கள் சொன்னபடியே குழந்தை முன்னணையில் கிடத்தப்பட்டிருக்கிறதைக் கண்டனர். தூதர்களின் வாழ்த்து



## மனன வசனம்

**கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம்பண்ணினார்கள். லூக்கா 2:17.**

தலையும் பாடலையும் நினைத்துப் பார்த்து இந்தக் குழந்தை தேவனுடைய குழந்தையென்றுணர்ந்து பக்தியுடன் பணிந்தனர். நிச்சயமாக அந்தக் குழந்தை இயேசு தேவனேதான் என்று நம்பினர்.

தேவதூதர்கள் தங்களுக்குக் காட்சியளித்து இயேசுவின் பிறப்பைப்பற்றிக் கூறியதைச் மரியாளிடமும் யோசேப்பிடமும், சொன்னார்கள். பரலோக தூதர்களின் இனிய பாடலைப் பற்றிப் பரவசத்துடன் சொன்னார்கள். இந்தக்குழந்தை நிச்சயமாகவே தேவன்தாம் என்று மிக உறுதியாகச் சொன்னார்கள். தங்கள் மந்தையை மறந்தனர்; இருட்டு, தூரம் இவற்றைப் பொருட்படுத்தவில்லை. இரட்சகரைப் பார்ப்பதே தங்களுக்கு முக்கியம் என்று ஓடிவந்திருந்தனர்.

மேய்ப்பர்களின் பேச்சு மரியாளுக்கும் யோசேப்புக்கும் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் தந்தது. மேய்ப்பர்களுடன் சேர்ந்து தேவனைத் துதித்தார்கள்.

அதுவுமன்றி, மேய்ப்பர்கள் சொன்ன யாவையும் மரியாள் தன்னுடைய உள்ளத்தில் வைத்துச் சிந்தனை பண்ணினாள் என்று வேதம் கூறுகிறது.

நிச்சயமாகவே அந்த மேய்ப்பர்கள் மரியாளின் சம்மதத்துடன் குழந்தை இயேசுவைத் தங்கள் கைகளில் எடுத்துத் தூக்கிக் கொஞ்சி மகிழ்ந்திருப்பார்கள். இந்தக் குழந்தையைப்பற்றித் தானே தேவ தூதர்கள் தம்மிடம் சொன்னார்கள் என்று பிரமித்திருப்பார்கள்.



மேலும் அந்த மேய்ப்பர்கள் இந்த மேலான செய்தியைத் தாங்கள் பார்க்கும் யாவரிடமும் மிகவும் மகிழ்ச்சியோடும்

## செய்தி

**என் குடும்பத்தாரிடம் அக்கறைகொள்ள தேவன் உதவுகிறார்.**

சொன்னார்கள். அதுவுமன்றி தூதர்கள் தங்களிடம் சொல்லிய யாவற்றையும் தூதர்களின் மதுர மான பாடல்களையும் கூறினார் கள். மேய்ப்பர்கள் சொல்லிய தைக்கேட்ட யாவரும் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். தேவ னின்மேல் அந்த மேய்ப்பர் களுக்கு அதிகமான பாசம் இருந்தது. மேசியாவின் பிறப்பை அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்திருக்க வேண் டும். எனவேதான், தேவன் நம் இரட்சகராகிய இயேசுவின் பிறப்பைக்குறித்து அந்த மேய்ப்பர்களுக்கு, தூதர்கள் மூலமாகச் சொன்னார். தேவ னின்மேல் மேய்ப்பர்கள் வைத் திருந்த அன்பினால்தான் தாங் கள் பார்க்கும் யாவரிடமும் இந்த நற்செய்தியைக் கூறினார்கள்.

என் செல்லமே! தேவனை நீ உண்மையாகவே நேசி. நீயும் இயேசுவின் அன்பைப் பிறரிடம் சந்தோஷமாய்ச் சொல்லிக் கொண்டே இருப்பாய்.

**செய்முறை:** குழந்தை இயேசுவைப் பார்க்கச் செல்லும் மேய்ப்பர்களுக்கு வழி காட்டி உதவு.

## புதிர் 13



# வண்ணம் தீட்டுக



Translated by ***Emelda Marshal,***

Printed by ***Oriental Watchman Publishing House, Pune.***